## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில்

# சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா!

### கர்நாடக அமைச்சர் ச.மதுபங்காரப்பா; கனிமொழிகருணாநிதி எம்.பி. தொடங்கி வைத்தனர்!



**சென்னை, ஜன.18-**

**தமிழ்நாடு அரசின் முன்னெடுப்பில், உலகளாவிய அறிவுப் பரிமாற்றத்தையும் பண்பாட்டு உரையாடலையும் வலுப்படுத்தும் நோக்குடன் நடைபெறும் 4வது சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா - 2026, 16.01.2026 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் சிறப்பாகத் தொடங்கி வைக்கப்பட்டது.**

இந்தத் தொடக்க விழாவில், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, கர்நாடக மாநில பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவு துறை அமைச்சர் ச.மதுபங்காரப்பா, ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இதனுடன், பள்ளிக் கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியும் தொடங்கி வைக்கப்பட்டது.

தொடக்க விழாவில், பொது நூலகத் துறை இயக்குநர் திருமதி ச. ஜெயந்தி, வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து, பள்ளிக் கல்வித் துறை கூடுதல் அரசு தலைமைச் செயலாளர் மருத்துவர் சந்திரமோகன் பி., தலைமையுரை யாற்றினார், "நினைவுச் சின்னங்கள் இடிந்து போகலாம்; எல்லைகள் மாறலாம்; ஆனால் சொற்கள் என்றும் நிலைத்திருக்கும் என்பதை வலியுறுத்திய அவர், நாகரிக நினைவுகளை பாதுகாப்பதிலும், காலங்களை கடந்த பண்பாடுகள் ஒன்றுடன் ஒன்று உரையாடுவதிலும் மொழி, இலக்கியம் மற்றும் மொழி பெயர்ப்பு வகிக்கும் முக்கியப் பங்கை எடுத்துரைத்தார்.

வெளியீட்டு ஒப்பந்தங்கள் புரிதலின் பாலங்களாக மாறுவதற்கான தளமாக உரிமைகள் மையம் (Rights Hub) செயல்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். மொழிபெயர்ப்பு, தணிக்கை, கவன பொருளாதாரம், சந்தை மாற்றங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற இன்றைய முக்கியப் போக்குகளுடன் CIBF தைரியமாகவும் தீர்மானமாகவும் ஈடுபட வேண்டும் என வலியுறுத்தினார்.

மொழிகள் பாலங்களாகவும், மொழிபெயர்ப்பு உறவாகவும், வெளியீடு பண்பாட்டு தூதரகமாகவும் மாறி, இந்நிகழ்ச்சி உலகங்களுக்கு இடையிலான வாசலாக உருவெடுக்கும் என்ற தொலைநோக்குடன் நிகழும்" என அவர் தனது உரையை நிறைவு செய்தார்.

பிராங்க்ஃபர்ட் புத்தகக் கண்காட்சியின் துணைத் தலைவர் (வணிக மேம்பாடு) திருமிகு கிளாடியா கைசர் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். "உலகின் மிகப் பழமையான புத்தகக் கண்காட்சியாக பிராங்க்ஃபர்ட் புத்தகக் கண்காட்சி விளங்குவதாகவும், அது BAPASI அமைப்பின் உறுப்பினராக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்தியா 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் இருமுறை மதிப்புறு விருந்தினராகப் பங்கேற்ற ஒரே நாடு என்றும், இனிவரும் காலங்களில் தமிழ் இலக்கியங்கள் உலக அரங்கில் அதிகளவில் இடம்பெறும் என்ற நம்பிக்கையையும்" அவர் வெளிப்படுத்தினார்.

பிரான்ஸ் நாட்டின் துணைத் தூதர் எதியன் ரோலான் பியக் அவர்கள் வழங்கிய வாழ்த்துரையில், "சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா பதிப்புத் துறைக்கான முக்கியமான சர்வதேச மேடையாக உருவெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டார். பிரெஞ்சு நூல்கள் அதிக அளவில் மொழி பெயர்க்கப்படும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதையும்" அவர் பாராட்டினார்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!**

தொடக்க விழா உரையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசுகையில்,

"CIBF 2023ல் 24 நாடுகள், 2024ல் 40 நாடுகள், 2025ல் 64 நாடுகள் பங்கேற்ற நிலையில், 2026ல் 102 நாடுகள் இணைந்துள்ளன. இத்திருவிழா இனி ஒரு கலாச்சார நிகழ்வாக மட்டுமின்றி, உலகின் பல்வேறு இலக்கிய மரபுகளுக்கிடையே சமமான மற்றும் நம்பிக்கையூட்டும் உரையாடலுக்கான மேடையாக வளர்ந்து வருகிறது" எனத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுகளில், 200க்கும் மேற்பட்ட இந்திய எழுத்தாளர்களின் படைப்புகள் 50க்கும் மேற்பட்ட சர்வதேச மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளதாகவும், அதில் 90 எழுத்தாளர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும் பெருமைக்குரியதாகும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் வழங்கும் மொழிபெயர்ப்பு மானியத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 200 மானியங்கள், ஒவ்வொன்றும் அமெரிக்க டாலர் 2,500 மதிப்பில் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதே அரசின் முதன்மை நோக்கம் என்றும், வாசிப்பே சமூக நீதிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அடித்தளம் என்ற உறுதியான நம்பிக்கையை CIBF பிரதிபலிப்பதாகவும் அவர் கூறினார்.

**கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!**

விழாப்பேருரை ஆற்றிய நாடாளுமன்ற உறுப்பினரும் கனிமொழி கருணாநிதி அவர்கள், பிற நாடுகளின் புத்தகக் கண்காட்சிகளில் தமிழ் இலக்கியங்கள் குறைவாகக் காணப்பட்ட அனுபவத்தை நினைவுகூர்ந்து, இனி தமிழ் இலக்கியங்கள் உலகம் முழுவதும் பயணம் செய்யும் காலம் தொடங்கி யுள்ளதாகக் குறிப்பிட்டார். இத்தகைய நிகழ்வுகள் மக்களிடையேயான வேறுபாடுகளை குறைத்து, பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், 100க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 100க்கும் அதிகமான பதிப்பாளர்கள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்துள்ளதுடன், இதன் ஒரு பகுதியாக 1,000க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) கையெழுத்தாகியுள்ளன என அவர் தெரிவித்தார்.

**கர்நாடக அமைச்சர் மதுபங்காரப்பா உரை!**

கர்நாடக மாநில கல்வி அமைச்சர் ச. மது பங்கரப்பா அவர்கள் சிறப்புரையில், தென்னிந்திய கலாச்சாரம் ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். இது போன்ற பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை விரைவில் கர்நாடக மாநிலத்திலும் தொடங்க உள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு தலைவர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் புத்தகத் திருவிழா, ஜனவரி 16 முதல் 18, 2026 வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ள நிலையில், 102 நாடுகளிலிருந்து 150க்கும் மேற்பட்ட பதிப்புத் துறை நிபுணர்கள் பங்கேற்று, உலகளாவிய பதிப்புத் துறையின் தற்போதைய போக்குகள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் குறித்து கருத்துப் பரிமாற்றம் செய்ய உள்ளனர்.

மொத்தம் 17 கருத்தரங்குகள், "நாகரிகங்களுக்கு இடையேயான ஒரு உரையாடல்" (A Conversation between the Civilisations) என்ற மையக் கருப்பொருளின் அடிப்படையில் நடைபெற உள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் முதல் முறையாக, இக்கருத்தரங்குகளில் கல்லூரி மாணவர்கள் அதிகளவில் பங்கேற்றுள்ளனர்.

இலக்கியம், அறிவு, பண்பாடு மற்றும் கலாச்சாரம் ஒன்றிணையும் உலகளாவிய பெருவிழாவாக சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா - 2026 அமைந்துள்ளது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தபடி

# பொங்கல் பரிசுத் தொகுப்பு 2.15 கோடி பேருக்கு ரூ.6453.54 கோடி வழங்கல்!

### 97% குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்! – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!



**சென்னை, ஜன.18-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த பொங்கல் பரிசுத் தொகுப்பு 2.15 கோடி பயனாளர்களுக்கு ரூ.6453.54 ரொக்கமாக வழங்கி சாதனை, 97% குடும்ப அட்டைதாரர்கள் பயன் அடைந்துள்ளனர் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.**

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதல்வர் அவர்களின் சீர்மிகு திட்டங்கள் மக்களை சென்றடையவும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், பேணிக்காத்திடவும், அயராது சிந்தித்தும் செயல்படுத்தி வருகிறார்கள். மக்களின் தேவைகளை அறிந்தும், உணர்ந்தும் துறைகள் தோறும் பல திட்டங்கள் அளித்து, அதில் சாதனைகளையும் புரிந்து வருகிறார்.மக்களுக்கான சேவைகளையும், வாழ்வின் பொருளாதாரத்தையும், வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், தன்னம்பிக்கையும் வளர்த்திடவும், கூட்டுறவுத் துறை ஒரு பெரும் அங்கம் வகிக்கிறது.

கூட்டுறவுத்துறையின் பல முத்தான திட்டங்கள் புதியதாக துவக்கியும், ஏற்கனவே உள்ள திட்டங்களை மேம்படுத்தியும், சிறப்பாகவும் செம்மையாகயும் செயல்படுத்தி வருவதை, கூட்டுறவுத்துறையின் அலுவலர்களும், பணியாளர்களும் சிறப்பாக கவனமுடன் தொய்வின்றி திறம்பட பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டை தாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000/வழங்கப்படும்" எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.1.2026 சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார். மேலும், துணை முதலமைச்சர் அவர்கள் சென்னை, சிந்தாதரிப்பேட்டை TUCS நியாயவிலை கடையிலும், அந்தந்த மாவட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு 04.01.2026 முதல் 07.01.2026 வரை தொடர்புடைய நியாய விலைக்கடைப் பணியாளர்களால் வழங்கப்பட்டது.

இதில், முதல் நாள் 200 குடும்ப அட்டைத்தாரர்களும், இரண்டாம் நாள் 300 முதல் 400 வரையிலான குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு ஏதுவாக தொடர்புடைய நியாய விலைக்கடைப் பணியாளர்களால் டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டது. இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பபட்டனர். பொங்கல் பண்டிகைக்கு முன்ன தாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்றது. இந்த தைத்திருநாளை ஒரு திருநாளாக மட்டுமல்ல, ஒரு திருப்புமுனையாக மாற்றியிருக்கிறது தமிழக அரசு.

தமிழ்நாட்டு மக்கள் சமத்துவத்தை ஊக்கமளித்திடும் பொருட்டு, ஒற்றுமையுடன் வேறுபாடின்றி வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் அன்றாட வாழ்வாதாரத்தில் பங்கு கொள்ளும் விதமாக குடும்பங்களின் தேவைகள் கருத்தில் கொண்டு அரசால் அட்டைகள் வழங்கப்படுகிறது. இதன் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தொகுப்பு பொருட்கள் பெறவும், அவர்களின் ஆதாரத்தை நிலை நாட்டிடவும் உதவுகிறது. ஏழைஎளிய மக்களுக்கான ஒரு உயரிய அங்கம்தான் குடும்ப அட்டைகள். அரசாங்கத்தின் திட்டங்கள், பயன்கங்கள் பெற உதவிடுகிறது. அரசாங்கத்திற்கும் மக்களுக்குமான நேரிடையான பந்த உறவு, மக்களாட்சியினை உறுதிபடுத்தும் ஸ்திரத்தன்மை யினை உணர்த்துகிறது.

ஜனவரி 4 - முதல்வரின் பொங்கல் பரிசுத் தொகுப்பு அறிவிப்பு. அதன் தொடர்ச்சியாக, ஜனவரி 5 – அரசாணை;வார்த்தை அல்ல செயல் அதுவே வாழ்வில் வந்த நம்பிக்கையாக செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு, இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர்களுக்கு கைகளில் பரிசாக ரொக்கமாக ரூ.3,000 வீதம் ரொக்கம் ரூ.6687.51கோடி, ஒரு கிலோ அரிசியாக ஒரு கிலோ சர்க்கரையாக ஒரு முழு நீளக் கரும்பாக பொங்கல் பரிசுத் தொகுப்பு ரூ.248.66 கோடி மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.668.12 கோடி செலவில் வேட்டி சேலை மொத்தம் ரூ.7604.29 கோடி செலவில் பொங்கல் பரிசுத் தொகுப்பு. எண்கள் பெரிது ஆனால் மக்கள் மகிழ்ச்சி அதைவிட பெரிது!

கரும்பு... விவசாயிகளிடமிருந்து தரம் பார்த்து கொள்முதல் செய்வதில் இத்துறை பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணி புரிந்தார்கள்.உழைப்பின் பலன் உழைப்பாளருக்கே!

இந்த டிஜிட்டல் மயமான காலகட்டத்தில் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகை ரொக்கமாக வழங்கிட கூட்டுறவுத் துறையின் சிறப்பான திட்டமிடல் மற்றும் தொய்வில்லாமலும், விரைவாக குறைந்த காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை பிற தேசிய வங்கிகள் செய்ய முடியாததை, கூட்டுறவு வங்கி திறம்பட செய்து சாதித்துள்ளது. இந்தியாவில் எந்த வங்கியும் செய்ய முடியாததை தமிழக கூட்டுறவுத் துறை செய்து முடித்தது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தொடங்குகிறது ஒரு பொறுப்பு...கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் வழியாக அந்த பொறுப்பு ஒழுங்காக வழி நடத்தப்படுகிறது. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியில் அது பாதுகாக்கப்படுகிறது...அங்கிருந்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளில் பயணம் வேகம் எடுக்கிறது—தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் அந்த ஓட்டம் அலுவலகத்திலிருந்து மக்களை நோக்கி இறுதியில் கூட்டுறவு பணியாளர்கள், விற்பனையாள ர்க ளின் கைகளில் ஓட்டம் நிறைவு பெறுகிறது. ரொக்கமாக...நேரடியாக...ஒரு நொடியும் தாமதமின்றி...பொதுமக்களின் கைகளில். இது சாதாரண விநியோகம் இல்லை கூட்டுறவுத் துறை அதிகாரிகளின் திட்டமிடுதல்... ஊழியர்களின் இரவு பகல் உழைப்பு...மொத்த கூட்டுறவு துறையின் அர்ப்பணிப்பு...இந்தியாவில் இதுவரை யாரும் செய்யாத வரலாற்றுச் சாதனை

சவால்கள் இருந்தன...காலம் குறைந்தது ஆனால் மக்கள் மகிழ்ச்சியே முதல்வரின் மன மகிழ்ச்சி!

இத்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள், உரிய பணிகளை இரவு பகலாக சிரமேற்கொண்டு, தங்கு தடைகளின்றி, மக்களின் நன்மை கருதியும், அவர்களது மன மகிழ் சார்ந்து, பொங்கல் தொகுப்பு 2026 அறிவிக்கப்பட்ட ஜனவரி 4 அன்று முதல் பொங்கல் தொகுப்பு துவக்கப்பட்ட ஜனவரி 8ம் நாளன்றுக்குள் மிக மிக குறுகிய நாட்களுக்குள் பணிகளை செவ்வனவே முடித்தது, மகிழ்ச்சியும் பாராட்டுத லுக்குரியது.

மேலும், இந்தியாவிலேயே 2.15 கோடி பயனாளர்களுக்கு ரூ.6453.54 ரொக்கமாக குறுகிய நாட்களுக்குள் பொங்கல் தொகுப்பினை 97% வழங்கியது தமிழக முதல்வர் அவர்களின் அரசு தான். இப்பெருமைக்கும் சாதனைக்கும் அயராது பணிகளை மேற்கொண்ட இத்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் மகிழ்வதோடு, அவர்களுக்கு மீண்டும் எனது பாராட்டுதலைகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ஏழைஎளியோர் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், தமிழ்நாட்டின் வளர்ச்சி குறிப்பாக, கூட்டுறவுத் துறையின் வாயிலாக அடிதட்டு ஏழை எளிய மக்களுக்கு விவசாயம் சார்ந்தவைகளுக்கு உறுதுணையாக செயல்படும் விதமாக, ஆக்கமும் ஊக்கமும் அளித்து இத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்டவர் ஆவார். இத்துறையின் சேவைகள், திட்டங்கள் மென்மேலும் தொடர்ந்து வளர்ச்சி நோக்கி பயணிக்கும்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கூறியுள்ளார்.




## தி.மு.க. இளைஞர் அணி




### மாவட்ட சமூக வலைதள துணை அமைப்பாளர்கள் நியமனம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

*கழகத் தலைவர்–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.*

*இந்தப் பொறுப்புகளுக்கு தமிழ்நாடு முழுவதும் இருந்து 1,450–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அவர்களை நேரில் அழைத்து, இதுவரை ஆற்றிய களப்பணிகள் மற்றும் சமூக வலைதளப் பணிகளை ஆய்வு செய்தோம். அவற்றின் அடிப்படையிலும், மாவட்டக் கழகச் செயலாளர்களின் பரிந்துரையின் பேரிலும் இவர்கள் தேர்வுசெய்யப்படுகின்றனர்.*

*அந்த வகையில், இளைஞர் அணி மண்டலம்–8–க்கு உட்பட்ட கழக மாவட்டங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சமூக வலைதள துணை அமைப்பாளர்களின் விவரம் வருமாறு:*

| வ. எண் | மாவட்டம் | துணை அமைப்பாளர் (சமூக வலைதளம்) |
|---|---|---|
| 1 | தேனி வடக்கு | பா.விஜயகுமார், 30-அ, பள்ளிவாசல் அருகில், சர்ச் தெரு, முத்துத்தேவன்பட்டி, வீரபாண்டி, தேனி மாவட்டம். |
| 2 | தேனி தெற்கு | சி.கே.இரவிக்குமார், வார்டு - 2, வேத கோவில் தெரு, குள்ளப்பகவுண்டன்பட்டி (அஞ்சல்), உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம். |
| 3 | விருதுநகர் வடக்கு | ம.ஆறுமுகம், 4/702, கட்டாலங்குளம், எஸ்.மறைக்குளம் அஞ்சல், திருச்சுழி வட்டம், விருதுநகர் மாவட்டம். |
| 4 | விருதுநகர் தெற்கு | சோ.ஆனந்தகுமார், 287, மாரியம்மன் கோயில் தெரு, திருவில்லிப்புத்தூர் - 626125. |
| 5 | இராமநாதபுரம் | சா.ரசாக், 6/43, அமீர் நகர், வன்னிக்குடி, புத்தேந்தல் அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம் - 623502. |
| 6 | சிவகங்கை | மு.வீரஈஸ்வரன், 245, கோட்டையிருப்பு அஞ்சல், திருப்பத்தூர் வட்டம், சிவகங்கை மாவட்டம். |
| 7 | தென்காசி வடக்கு | இரா.அருள் ஜோதி பாபா 51, நரசிங்கபெருமாள் கோவில் தெரு, புளியங்குடி - 627855. |
| 8 | தென்காசி தெற்கு | பீ.செய்யது பாட்ஷா, 2/52, பள்ளிவாசல் தெரு, முத்தம்மால்புரம், வி.கே.புதூர் வட்டம், தென்காசி - 62791 |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14.01.2026

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி